## *DEPOSITION OF WITNESS*

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***

***CC.No.161/2026 – P.W. 1 (LW-1)***

| | |
|---|---|
| *Name* | திரு.கார்த்திகேயன் (முதல் நிலை காவலர்) |
| *Father's Name* | ராமதாஸ் |
| *Village* | கோட்டூர் காவல் நிலையம் |
| *Age* | *36* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.03.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் கோட்டூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.01.2026 ஆண்டு நான் கோட்டூர் காவல் நிலையத்தில் முதல் நிலை நிலை காவலராக பணிபுரிந்த போது மதுவிலக்கு சம்மந்தமாக எங்கள் சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் ரோந்து பணியில் காவல் உதவி ஆய்வாளர் திருமதி ஸ்ரீநிதி மற்றும் 2ம் நிலை காவலர் திரு. வினோதன் ஆகியோர்களுடன் நானும் கண்காணித்து வந்தபோது, கோட்டூர் தோட்டம், எதிரியின் வீட்டின் பின்புறம் சந்தேகம்படும்படி நின்றுக்கொண்டிருந்த நபர் எங்களை கண்டதும், ஒரு நபர் எத்தனித்து ஓடியவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் ராயப்பன் மகன் சகாயராஜ் என்று கூறினார். (**சாட்சி கூண்டிலிருக்கும் ஆஜர் எதிரியை அடையாளம் காட்டுகிறார்**)

2. மேற்படி காவல் உதவி ஆய்வாளர் ஆஜர் எதிரி நின்றுக்கொண்டிருந்த இடத்தை சோதனை செய்து பார்த்தபோது, டாஸ்மாக் 180 ml Monitor என்று லேபில் ஒட்டப்பட்ட 26 பிராந்தி அரசு மதுபான பாட்டில்கள் இருந்தது. அதைப்பற்றி காவல் உதவி ஆய்வாளர் எதிரியிடம் விசாரித்தபோது விற்பதற்காக வைத்திருப்பதாகவும், அதற்கான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை என்று கூறினார். மேற்படி காவல் உதவி ஆய்வாளர் எதிரியை அதே இடத்தில் குற்றக் காரணம் கூறி 09.30 மணியளவில் கைது செய்து ஆஜர் எதிரியிடமிருந்து ஆஜர் எதிரி வைத்திருந்த தடயப் பொருட்களை 09.45 மணியளவில் கைப்பற்றுதல் மகசரில் காவல் உதவி ஆய்வாளர்

கைப்பற்றினார். தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் காவல் உதவி ஆய்வாளருடன் சென்ற நானும் 2 ம் நிலை காவலர் திரு. வினோதன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பின்னர் காவல் உதவி ஆய்வாளர், எங்கள் முன்னிலையில் தடயப் பொருட்களை 10.00 மணியளவில் அழித்து அழிப்பு மகசர் தயார் செய்தார். அதிலும் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(அழிப்பு மகசர் அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் எதிரி மற்றும் மகசருடன் நிலையம் வந்து எதிரியின் மீது நிலையக் குற்ற எண்.21/2026 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கின் புகார்தாரரான காவல் உதவி ஆய்வாளர் என்னுடைய மேல் அதிகாரி என்றால்-சரிதான். இவ்வழக்கில் தனிநபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என சொல்லியுள்ள நிலையில் காவல் உதவி ஆய்வாளர் தனி நபருக்கு அழைப்பாணை எதுவும் கொடுத்தாரா என்றால்-இல்லை. இவ்வழக்கில் காவல் உதவி ஆய்வாளர் தான் தடயப் பொருட்களை அழித்தார் என்றால்-சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களிலிருந்து பகுப்பாய்வுக்காக காவல் உதவி ஆய்வாளர் பிரித்து எடுத்தாரா என்றால்-இல்லை. புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கில் எனது உயர் அதிகாரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்-சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 13.03.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

## *DEPOSITION OF WITNESS*

### *(Chapter XXIII Code of Criminal Procedure)*

### *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi*
### *CC.No.161/2026 – P.W. 2 (LW-2)*

| | |
|---|---|
| *Name* | திரு.வினோதன் (முதல் நிலை காவலர்) |
| *Father's Name* | செல்வராஜ் |
| *Village* | கோட்டூர் காவல் நிலையம் |
| *Age* | 36 |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.03.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் கோட்டூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.01.2026 ஆண்டு நான் கோட்டூர் காவல் நிலையத்தில் 2 ம் நிலை நிலை காவலராக பணிபுரிந்த போது மதுவிலக்கு சம்மந்தமாக எங்கள் சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் ரோந்து பணியில் காவல் உதவி ஆய்வாளர் திருமதி ஸ்ரீநிதி மற்றும் முதல் நிலை காவலர் திரு. கார்த்திகேயன் ஆகியோர்களுடன் நானும் கண்காணித்து வந்தபோது, கோட்டூர் தோட்டம், எதிரியின் வீட்டின் பின்புறம் சந்தேகம்படும்படி நின்றுக்கொண்டிருந்த நபர் எங்களை கண்டதும், ஒரு நபர் எத்தனித்து ஓடியவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் ராயப்பன் மகன் சகாயராஜ் என்று கூறினார். (**சாட்சி கூண்டிலிருக்கும் ஆஜர் எதிரியை அடையாளம் காட்டுகிறார்**)

2. மேற்படி காவல் உதவி ஆய்வாளர் ஆஜர் எதிரி நின்றுக்கொண்டிருந்த இடத்தை சோதனை செய்து பார்த்தபோது, டாஸ்மாக் 180 ml Monitor என்று லேபில் ஒட்டப்பட்ட 26 பிராந்தி அரசு மதுபான பாட்டில்கள் இருந்தது. அதைப்பற்றி காவல் உதவி ஆய்வாளர் எதிரியிடம் விசாரித்தபோது விற்பதற்காக வைத்திருப்பதாகவும், அதற்கான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை என்று கூறினார். மேற்படி காவல் உதவி ஆய்வாளர் எதிரியை அதே இடத்தில் குற்றக் காரணம் கூறி 09.30 மணியளவில் கைது செய்து ஆஜர் எதிரியிடமிருந்து ஆஜர் எதிரி வைத்திருந்த தடயப் பொருட்களை 09.45 மணியளவில் கைப்பற்றுதல் மகசரில் காவல் உதவி ஆய்வாளர்

கைப்பற்றினார். தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் காவல் உதவி ஆய்வாளருடன் சென்ற நானும் முதல் நிலை காவலர் திரு. கார்த்திகேயன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். (**கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**).

3. பின்னர் காவல் உதவி ஆய்வாளர், எங்கள் முன்னிலையில் தடயப் பொருட்களை 10.00 மணியளவில் அழித்து அழிப்பு மகசர் தயார் செய்தார். அதிலும் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். (**அழிப்பு மகசர் ஏற்கனவே அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**). பின்னர் எதிரி மற்றும் மகசருடன் நிலையம் வந்து எதிரியின் மீது நிலையக் குற்ற எண்.21/2026 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் புகார்தாரரான காவல் உதவி ஆய்வாளர் என்னுடைய மேல் அதிகாரி என்றால்-சரிதான். இவ்வழக்கில் தனிநபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என சொல்லியுள்ள நிலையில் காவல் உதவி ஆய்வாளர் தனி நபருக்கு அழைப்பாணை எதுவும் கொடுத்தாரா என்றால்-இல்லை. இவ்வழக்கில் காவல் உதவி ஆய்வாளர் தான் தடயப் பொருட்களை அழித்தார் என்றால்-சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களிலிருந்து பகுப்பாய்வுக்காக காவல் உதவி ஆய்வாளர் பிரித்து எடுத்தாரா என்றால்-இல்லை. புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கில் எனது உயர் அதிகாரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்-சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 13.03.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.161 /2026 – P.W. 3 (Add W)***

| | |
|---|---|
| *Name* | திரு. செல்வநாயகம் (காவல் உதவி ஆய்வாளர்) |
| *Father's Name* | மீனாட்சிசுந்தரம் |
| *Village* | கோட்டூர் காவல் நிலையம் |
| *Age* | *52* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.03.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் கோட்டூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2026-ம் ஆண்டு கோட்டூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் ஆய்வாளர் திருமதி ஸ்ரீநிதி என்பவர் தற்போது மகப்பேறு விடுப்பில் உள்ளதால் அவருடைய கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்பதாலும், காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி இவ்வழக்கு கோப்பு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 30.01.2026 ஆண்டு மதுவிலக்கு சம்மந்தமாக எங்கள் சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் ரோந்து பணியில் காவல் உதவி ஆய்வாளர் திருமதி ஸ்ரீநிதி, மற்றும் முதல் நிலை காவலர் திரு. கார்த்திகேயன் 2ம் நிலை காவலர் திரு. வினோதன் ஆகியோர்கள் கண்காணித்து வந்தபோது, கோட்டூர் தோட்டம் எதிரியின் வீட்டின் பின்புறம் அருகில் சந்தேகம்படும்படி நின்றுக்கொண்டிருந்த நபர் மேற்படி போலிசாரை கண்டதும், ஒரு நபர் எத்தனித்து ஓடியவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் ராயப்பன் மகன் சகாயராஜ் என்று கூறியுள்ளார்.

3. மேற்படி காவல் உதவி ஆய்வாளர் ஆஜர் எதிரி நின்றுக்கொண்டிருந்த இடத்தை சோதனை செய்து பார்த்தபோது, டாஸ்மாக் 180 ml Monitor என்று லேபில் ஒட்டப்பட்ட 26 பிராந்தி அரசு மதுபான பாட்டில்கள் இருந்ததுள்ளது. அதைப்பற்றி மேற்படி காவல் உதவி ஆய்வாளர் எதிரியிடம் விசாரித்தபோது விற்பதற்காக

வைத்திருப்பதாகவும், அதற்கான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை என்று கூறியுள்ளார். மேற்படி காவல் உதவி ஆய்வாளர் எதிரியை அதே இடத்தில் குற்றக் காரணம் கூறி 9.30 மணியளவில் கைது செய்து ஆஜர் எதிரியிடமிருந்து ஆஜர் எதிரி வைத்திருந்த தடயப் பொருட்களை 9.45 மணியளவில் கைப்பற்றுதல் மகசரில் காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றியுள்ளார். தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் காவல் உதவி ஆய்வாளருடன் சென்ற மேற்படி போலிசாரிடம் சாட்சிகளாக சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர் மேற்படி காவல் உதவி ஆய்வாளரால் தாயர் செய்யப்பட்டது தான். (**கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. பின்னர் காவல் உதவி ஆய்வாளர், மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் தடயப் பொருட்களை 10.00 மணியளவில் அழித்து அழிப்பு மகசர் தயார் செய்து, அதிலும் மேற்படி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அழிப்பு மகசரர் மேற்படி காவல் உதவி ஆய்வாளரால் தாயர் செய்யப்பட்டது தான். (**அழிப்பு மகசர் ஏற்கனவே அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**). பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது காவல் நிலைய குற்ற எண். 21/2026, சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act -ன் கீழ் காவல் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்துள்ளார். காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சிகள் 1, 2 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். (**அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் எதிரியை தக்க சட்டவழிக்காட்டுதலுடன் நிலைய பிணையிலேயே விடுவிக்கப்பட்டுள்ளார்.

5. இத்துடன் அவரது புலன்விசாரணை முடித்து வழக்கு சம்பவம் உண்மையென தெரியவரவே எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act-ன் தண்டிக்கத்தக்க குற்றம் என்று கடந்த 30.01.2026-ம் தேதியன்று எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் தனிநபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என சொல்லியுள்ள நிலையில் உதவி ஆய்வாளர் தனி நபருக்கு அழைப்பாணை எதுவும்

கொடுத்தாரா என்றால்-இல்லை. இவ்வழக்கில் தமிழ்நாடு மதுவிலக்குஅமல் சட்டப்பிரிவு 32 ல் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகளின் படி தடயப்பொருள் அழிக்கப்பட்டது குறித்த விவரம் எதுவும் தங்கள் கோப்பில் உள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கில் உதவி ஆய்வாளர் தான் தடயப் பொருட்களை அழித்தார் என்றால்-சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களிலிருந்து பகுப்பாய்வுக்காக உதவி ஆய்வாளர் பிரித்து எடுத்தாரா என்றால்-இல்லை. புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்-சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 13.03.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.